REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—6 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: கார்த்திகை 4உ செவ்வாய் (19—11—57) ★ ★ வெளியூர்: கார்த்திகை 5உ புதன் (20—11—57) [இதழ் 135

இரண்டாவது உலகப் போரில் ஜெர்மன் தந்த பலி?

பெர்லின், நவ. 18—

இரண்டாவது உலகப் போரில் ஏறக்குறைய 13-இலட்சம் ஜெர்மானிய போர் வீரர்களும், 23-இலட்சம் ஜெர்மன் குடிமக்களும் கொல்லப்பட்டோ அல்லது காணமலோ போய்விட்டனரென்று மேற்கு ஜெர்மன் உள்ளூர் உறவினர் இலாகா வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தித் திணிப்பின் நோக்கம் 'ஏக இந்தியா' திட்டம்தானும்!

'தேசியமொழி'யாவதற்கு இந்திக்கே தகுதியாம்

உ. பி. மாநில கல்வி மந்திரி அம்பலப்படுத்துகிறார்

இந்தித் திணிப்பின் நோக்கம் எல்லாம், 'இந்தியாவை ஒரே தேசமாக்க, இந்திய ஒற்றுமை என்ற பெயரில் தென்னாட்டை வடநாட்டிற்கு அடிமையாக்கத்தான்' என்பதை உ. பி. மாநில கல்வி மந்திரி அம்பலப்படுத்தியுள்ளார்.

ஆக்ரா, நவ. 17—

உத்தரப் பிரதேச மாநில கல்வி மந்திரி பண்டிட் கமலாபதி திரிபாதி என்பவர், 'இந்தி ஏன் திணிக்கப்படுகிறது' என்பதற்கான காரணத்தை விளக்குகிறார் கேளுங்கள்!

ஆக்ரா பல்கலைக்கழகத்தின் இந்தி மாணவர்கள், ஆசிரியர்களிடைப் பேசினாராம், அவர்.

இந்தி, மொத்தம் 18 கோடி மக்களால் பேசப்படுகிறதாம்!

வேறு எந்தப் பிரதேச மொழியும் இவ்வளவு விரிவான பிரதேசத்தில் வழங்கப்படுவதாகக் கூற முடியாதாம்!

எனவே இந்தி, இந்தியாவின் தேசீய மொழியாக இருக்கக் கூடாது என்பதற்கு எவ்விதக் காரணமும் இல்லையாம்!

இந்திப் பிரியர்களை, வகுப்புவாதிகள் எனக் கூறுவது கொடுமையானதாம்—அநீதியானதாம்!

இந்திக்குத் தேசீய கௌரவம் தரப்பட்டிருக்கிறதாம்!

இதைச் செய்தவர்கள் எல்லாம் மகாத்மாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாம்!

இவர்கள் இந்திக்குத் தேசீய கௌரவம் தந்ததின் நோக்கம் எல்லாம், இந்தியாவில் ஒற்றுமையை உருவாக்க வேண்டும் என்பதுதானும்!

ஒற்றுமையை இந்தியினால் மட்டும்தான் பெற முடியுமாம்!

இப்போது சிலர் மீண்டும் இந்திப் பிரச்சினையைக் கிளப்புவதின்மூலம் பிரிவினை சக்திகளையும், குழப்பத்தையும் வளர்க்கிறார்களாம்!

இதற்காக — 'இந்தியாவின் ஒற்றுமைக்காக நாம் எதையும், இந்தியைக்கூட தியாகம் செய்ய வேண்டும்' என்று கூறினாராம், அந்த மந்திரி!

இந்தி, ஆட்சி மொழி என்றுதான் அரசியல் சட்டத்தில் கூறியிருக்கிறதே தவிர, 'இந்தியா முழுமைக்கும் அது ஒரே தேசீய மொழி' என்று கூறப்படவில்லை.

ஆனால், இந்த உண்மையை இந்தி வெறியர்கள் மறைத்துவிட, 'இந்தியாவின் ஒரே தேசீய மொழி இந்திதான்' என்று திரும்

(4-ம் பக்கம் பார்க்க)

குழுவின் கூட்டம் பகிரங்கமாக நடைபெற வேண்டும்

ஆட்சிமொழிப் பிரச்சினையில் மக்கள் கருத்தறிய வேண்டியது மிக அவசியம்

இந்திபற்றி இரகசியமான விவாதத்திற்கு பிராங்க் அந்தோணி கடும் கண்டனம்

புதுடில்லி, நவ. 18—

இந்தித் திணிப்புக் குழுவின் சிபாரிசுகளைப் பரிசீலிக்க நியமிக்கப்பட்டுள்ள மக்கள் சபை உறுப்பினர் குழு, தனது கூட்டங்களை இரகசியமாக நடத்துவதற்கு குழுவில் உறுப்பினரான பிராங் அந்தோணி எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்,

"குழுவின் கூட்டங்கள் பகிரங்கமாக நடைபெற வேண்டும்; அங்கு பத்திரிகைப் பிரதிநிதிகள் அனுமதிக்கப்பட வேண்டும்; அப்போதுதான், குழுவினர், மக்களின் கருத்தை அறியமுடியும்" என்று, அந்தோணி தெரிவித்திருக்கிறார்.

அறிக்கை ஒன்றில் அவர், குழுவினர் அனுசரிக்க உத்தேசித்துள்ள நடைமுறையைக் கண்டித்திருப்பதுடன், கூட்டம் பகிரங்கமாக நடைபெற வேண்டுமென கடந்த வாரத்தில் குழுவின் முதற் கூட்டத்தில் தெரிவித்த யோசனையைக் குழுவினர் நிராகரித்து விட்டதற்காக மிக வருந்துவதாகவும் தெரிவித்திருக்கிறார்.

அறிக்கை ஒன்றில் அவர் கூறுவதாவது:—

"குழுவினர் இரகசியமாகக் கூடுவது என்பது, தவறு என்பது மட்டுமல்ல—ஒழுக்கக்கேடானதுமாகும். குழுவிற்கு, பிரத்தியேகமான பொறுப்பான நிலை தரப்பட்டிருக்கிறது.

"குழுவின் அறிக்கையை மக்கள்சபை விவாதிக்கும் சந்

(4-ம் பக்கம் பார்க்க)

வடநாட்டவரின் இந்தி வெறி எப்படிப்பட்டது?

உத்தரப் பிரதேச எம். பி. பதில் கூறுகிறார்!

புதுடில்லி, நவ. 18—

வடநாட்டவரின் இந்தி வெறி எப்படிப்பட்டது, தெரியுமா?

மாநிலங்கள் சபையில் இடம் பெற்றிருக்கும் உ. பி.-யைச் சேர்ந்த உறுப்பினரொருவர் இந்தியில் பேசினாராம்; ஆனால், அந்த இந்தி பண்டித நேருவுக்கே புரியவில்லையாம்! அவ்வளவு கடினமாக, மிகுந்த சவமொழிமயமான இந்தியில் பேசினாராம்!

அமோலக் சந்த் என்ற அந்த உறுப்பினர், நாகர்களைப் பற்றி ஒரு உபகேள்வி எழுப்பும்போதுதான் இப்படிப் பேசினாராம்; இதனைப் புரிந்துகொள்ள முடியாமல், வெளிவிவகார உதவி மந்திரி இலட்சுமிமேனன் திண்டாடியிருக்கிறார்,

அருகிலிருந்த பண்டிதர், "எனக்குக்கூட கனம் உறுப்பினரின் இந்தி முழுவதுமாகப் புரியவில்லை; ஆனாலும், நான் பதில் தரத் தயாராயிருக்கிறேன்" என்று கூறியிருக்கிறார்.

பிறகு அந்த உறுப்பினர் தமது கேள்வியை ஆங்கிலத்தில் திரும்பக் கூறியிருக்கிறார்.

பஞ்சாப் இருமாநிலங்களாகத் துண்டாடப்படும்

ஒப்புக்கொண்ட ஏற்பாட்டை சீர்குலைக்காதீர்

இந்தி வெறியருக்கு அகாலிதளம் தரும் எச்சரிக்கை

பஞ்சாபில் இந்திக்கு ஆதிக்கம் கோரி நடத்தப்படுகிற கிளர்ச்சியை சீக்கியரின் அகாலிதளம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

"ஒப்புக்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளைச் சீர்குலைக்காதீர்; ஒற்றுமையைப் பாழடிக்காதீர்" என்று எச்சரிக்கிறது அகாலிதளம்!

நடைபெறுகிற கிளர்ச்சி நீடிக்குமானல், தகராறுகள் மீண்டும் கிளம்பும்; விளைவாக, பஞ்சாப் இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டியிருக்கும்; இதனால் இந்திக்கு எவ்வித பலனும் இல்லாமற் போகும்.

"பஞ்சாப் மாநிலத்தை இந்தி, பஞ்சாபி என இரண்டு மொழி மாநிலங்களாகப் பிரிப்பதைத் தவிர்க்கும் நோக்குடன்தான் பிரதேச ஏற்பாடு உருவாக்கப்பட்டது. பஞ்சாப்—பெப்சு மாநிலங்களைச் சேர்ந்த தேசீய சக்திகள், இந்த நேரத்தில், இந்திக்காகக் கிளர்ச்சி செய்வது ஒப்புக்கொள்ளப்பட்ட ஏற்பாட்டினை சீர்குலைப்பதாகும்" என்று, அகாலிதள மாநாடு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

மாநாடு மேலும் ஒரு தீர்மானத்தில், "பிரதேச ஏற்பாட்டினை அமுல் செய்வதற்காக குடியரசுத் தலைவர் காலாகாலத்தில் மேற்கொண்டுள்ள நடவடிக்கையைப் பாராட்டுகிறோம்; ஆனல் பிரதேசக் கமிட்டிக் கூட்டங்கள் இரகசியமாக நடைபெற வேண்டும் என்பது குறைபாடுகளுடையது—ஜனநாயக விரோதமானது; பிரதேசக் கமிட்டிகளின் கூட்டங்கள் பத்திரிகைகளுக்கும், மக்களுக்கும் தெரியும்வண்ணம் நடைபெற வேண்டும்; அதற்கொப்ப விதிகளைத் திருத்த வேண்டும்" என்றும் முடிவு கூறியிருக்கிறது.

இந்தியை பரப்புவதில் சில மாநிலங்களுக்கு அக்கறை இல்லையாம்

டெல்லி மந்திரியின் கவலை

புதுடில்லி, நவ. 18—

இந்தியைப் பரப்புவதற்கான திட்டங்களை அமுல் செய்வதில் சில மாநிலங்கள் போதுமான அளவு அக்கறை காட்டவில்லையாம்!

பல சந்தர்ப்பங்களில் மத்திய சர்க்காரிலிருந்து, இதற்காக மாநில சர்க்கார்களுக்கு ஒதுக்கித்தந்த தொகையை மாநில சர்க்கார்கள் உபயோகிக்காமலேயே விட்டுவிட்டனவாம்!

இந்தத் தகவலை மக்கள் சபையில், கல்வி இலாகா மந்திரி டாக்டர் கே. எஸ். சீமாலி தெரிவித்திருக்கிறார்.

இந்தி சிட்ச சமிதி என்ற ஒரு நிறுவனம், இந்தியைப் பரப்புவதற்காக அகில இந்திய இந்தி நிறுவனங்களுக்கு மத்திய சர்க்கார் நேரடியாகவே மானியம் தர வேண்டும் என்று கேட்டிருக்கிறதாகவும், இந்த யோசனையை சர்க்கார் ஏற்கவில்லை என்றும் அந்த மந்திரி தெரிவித்திருக்கிறார்.

அரிசி விலை ஏற்றத்தைத் தடுக்க!

நியாய விலைக் கடைகளில் அரிசி இருமடங்கு தரப்படும்

கேரள சர்க்கார் நடவடிக்கை

திருவனந்தபுரம், நவ. 16—

வரும் டிசம்பர் திங்களில், அரிசி விலை ஏறக்கூடும் என்பதால், அதனைத் தடுக்கும் நோக்கத்துடன் கேரள சர்க்கார், நியாய விலைக் கடைகளில் தரப்படும் அரிசியின் அளவை இருமடங்காக்க உத்தேசித்திருப்பதாக உணவு மந்திரி ஜார்ஜ் இங்கு தெரிவித்திருக்கிறார்.

இப்போது நியாய விலைக் கடைகளில் குடும்பம் ஒன்றுக்கு வாரத்திற்கு ஒரு 'எடங்கழி' (உள்ளூர் அளவை) அரிசி தரப்படுகிறது என்றும், இனி இது இரண்டு 'எடங்கழி'யாக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

25 இலட்சம் அடையாளச் சீட்டுக்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும், இவர்களுக்கு 6,000 நியாய விலைக் கடைகள் மூலம் அரிசி வழங்கப்படுவதாகவும் மந்திரி தகவல் தந்திருக்கிறார்.

டெல்லியின் போக்கு

ஜனவரித் திங்களில் பர்மா அரிசி தந்து உதவுவதாக டெல்லி சர்க்கார் தெரிவித்திருந்ததாகவும், ஆனல் இப்போது, பர்மா அரிசியை ஒரிசா, மற்றும் மாநிலங்களுக்குத் தரப்போவதால் கேரளத்திற்கு பர்மா அரிசி தரமுடியாது என டெல்லி தெரிவித்துவிட்டதாகவும் அந்த மந்திரி தெரிவித்துள்ளார்.

நம் நாடு
தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 19—11—57 செவ்வாய்

நெருக்கடி வலுக்கிறது!

உணவுப் பொருள் விலை ஏற்றம் பயமுறுத்தல் நிலையிலிருந்து, இப்போது, பெரும் பாதகங்களை உருவாக்கும் நிலைக்கு வந்துவிட்டது.

சென்னை நகரத்தில் இன்று, சாதாரணமாக கடைசித் தர அரிசி, படி ஒரு ரூபாயும் ஒரு அணுவும் விலை தந்தாலன்றிக் கிடைப்பதில்லை. கடந்த மாதத்தில் பதினென்கணுவாக இருந்த இந்த விலை, இந்த வாரத்தில் மூன்றணுவுக்கு மேல் உயர்ந்துவிட்டது.

இதனுல், வரையறுக்கப்பட்ட மிகக் குறைவான வருமானம் கொண்டு காலந்தள்ளும் ஏழை - எளிய - நடுத்தர மக்கள் அனுபவிக்கிற கொடுமை சொல்லுந்தரமன்று! இந்தக் கொடுமையைத் தாங்கள் உணர்ந்திருப்பதாக சர்க்காரில் இருப்பவர் கூறுவதெல்லாம், வாயளவு அங்கீகாரமாகவே இதுவரை இருந்து வந்திருக்கிறது.

கடந்துபோன இரண்டொரு வாரங்களில் திடீரென அரிசி விலை சுமார் இருபத்தைந்து சதவிகிதம் ஏறியிருப்பதற்குக் காரணம் என்ன?

சர்க்கார் தருகிற கணக்குப்படி, நியாய விலைக் கடைகள் மூலம் ஏற்கனவே தரப்பட்டு வந்த அரிசி, இப்போதும் தரப்பட்டு வருவதாகக் கூறப்பட்டிருக்கிறது. என்றாலும், விலைகள் திடீரென மேலும் ஏறுவானேன்?

நியாயவிலைக் கடைகள் போதுமானதாக இல்லை; அங்கு தரப்படுகிற அரிசியும் தரமாக இல்லை; அந்த அரிசிகூட, எல்லா மக்களின் பூராத் தேவையையும் பூர்த்தி செய்யக்கூடிய அளவு அங்கு கிடைப்பதில்லை—என்ற இந்தக் குறைபாடுகள்; எந்த நோக்கத்திற்காக இந்த நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டனவோ, அந்த நோக்கத்தில் வெற்றிபெற முடியாமற் செய்துவிட்டன என்பதும் ஏற்கனவே அறியப்பட்டதுதான்.

இருந்தும், அரிசி விலை மேலும் மேலும் உயர்ந்து கொண்டே செல்லக் காரணம் என்ன?

இந்த மாநில மந்திரி ஒருவர், தனக்குள்ள இராஜதந்திர விவேகத்தைக் காட்டிக் கொள்வதாக நினைத்து, ஒருமுறை சட்ட சபையில், 'எந்த இடத்தில் எதைப் பேசுவது என்பதைத் தெரிந்துபேச வேண்டும் என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள்' என்று கூறினர்—எதிர்க் கட்சிக்காரர்களுக்கு உபதேசம் புரிந்தார்;

ஆனுல் இந்த உபதேசம்—இப்போது அவசரமாகத் தேவைப்படுவது — டெல்லிப் பெரியவர்களுக்குந்தான் என்று கூறினுல் மிகையாகாது.

அரிசி போன்ற உணவுப் பொருள்களைப் பதுக்கி வைத்துக் கொள்ளை இலாபமடிக்கக் கருதுவோர் இருக்கின்றனர் என்றும் மந்திரிகள் கூறுகின்றனர். இவர்களது இந்த சமூக விரோத நோக்கத்தைத் தடுக்க, தங்களது நடவடிக்கைகளுக்கு ஆற்றலிருக்கவில்லை என்பதையும் அவர்களே ஒப்பியிருக்கின்றனர், வெட்கத்தைவிட்டு! இது வன்னியில், கடந்த பத்தாண்டுக் கால காங்கிரஸ் ஆட்சி, இது போன்ற வியாபாரிகளின் கொள்ளை இலாப நோக்கிற்கு இயற்கைத் தன்மையையும் கொண்டுவந்து சேர்த்துள்ளது. இந்த நிலையைத் தெளிவாக உணர்ந்திருந்தும், இந்த நேரத்தில் எதை எப்படிப் பேசுவது என்று தெரியாமல் பேசுவது, ஆபத்தான விளைவுகளை உண்டாக்காதா?

'அடுத்த ஆண்டு, நாம் கணக்கற்ற கஷ்ட நஷ்டங்களை அனுபவிக்கப் போகிறோம்; பற்றுக்குறை மேலும் பெருகப்போகிறது; பஞ்சம் தலைதூக்கிவிட்டது' என்று பொறுப்புள்ள மந்திரிகள்—அரவமின்றி காரியத்தில் ஈடுபட்டு நிலைமைகளைச் சமாளிக்க உறுதி பூணவேண்டிய மந்திரிகள், கடந்த ஒரு மாத காலமாக இடைவிடாமல் பேசி வருகின்றனர். இதனுடைய விளைவு என்ன? மேலும் விலை ஏற்றம்!

தந்திரமறிந்த வியாபாரிகள், அடுத்த ஆண்டு வரப்போகிற நெருக்கடியில், தங்களின் இலாபத்தைக் கணக்கிட்டிருக்க வேண்டும்; கைவசமிருக்கும் பொருள்களை முடக்கிவிட்டிருக்க வேண்டும்; விளைவாக விலை மேலும் ஏறுகிறது!

இப்போது இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கிற இந்த அரிசி விலை ஏற்றத்திற்கு வேறு எந்த நியாயமான காரணமும் புலப்படாத நிலையில், பொறுப்புள்ளவர்களின் அபாயச் சங்கு, கொள்ளை இலாப நோக்குடையோருக்கு அவர்களின் ஆசையை இரட்டிப்பாக்கவே உதவியிருக்கிறது என்று கூறுவதில், தவறு என்ன?

கொள்ளை இலாபமடிப்பவர்களையும் கட்டுப்படுத்த முடியவில்லை; நியாய விலைக் கடைகளையும் பயனுள்ளதாக்க முடியவில்லை. பேச்சு மட்டும் என்னவோ, வாய் கிழிகிறது!

'பற்றுக்குறை, பற்றுக்குறை' என்று ஒரு நாள் பேசுவதும், 'உணவு உற்பத்தி பெருகியிருக்கிறது' என்று மறுநாள் பேசுவதும், 'நெருக்கடி வருகிறது' என்று இன்னொரு நாள் கூக்குரலிடுவதும் மட்டும், மந்திரிமார்களின் வேலையாயிருந்துகொண்டிருக்கிறதே தவிர, நெருக்கடியின் ஆழத்தை உணர்ந்து, அது, அடுத்தாற்போல் மேற்கொள்ளக்கூடிய உருவத்தையும் கணக்கிட்டு, அதற்கொப்ப நெருக்கடி வளராமல் தடுக்கவும், ஏற்பட்ட நெருக்கடியிலிருந்து மக்களைக் காப்பாற்றவும், தோன்றிய நெருக்கடியைக் களையவும், நீண்டகால, குறுகிய கால உடனடித் திட்டங்கள் வகுத்துச் செயல்படுவதற்கு வழியும் இல்லை-வகையும் இல்லை மாநில-மத்திய அரசுகளுக்கு! எடுத்துள்ள நடவடிக்கைகள் எல்லாம் அரைகுறை மனதுடனும், அவசரக் கோலத்திலும் மேற்கொள்ளப்படுகின்றன. விளைவு என்னவோ, உணவுப் பிரச்சினை உருவிலும் வடிவிலும் நாளும் பயங்கரமாக வளர்ந்து கொண்டேயிருக்கிறது.

மூன்று நாளைக்குமுன் ஒரு படி அரிசி வாங்கிய காசைக்கொண்டு ஒரு குடும்பம், இங்கு இப்போது, முக்கால்படிதான வாங்கமுடிகிறது; நிலைமை அவ்வாறிருக்கையில், போதாது இக்கொடுமை என்று, 'பெருந்தீனி தின்னுதீர்' என்று உபதேசம் வேறு புரிகிறூர், பண்டிதர்! யாரிடம் சொல்லி அழுவது, இந்த அவலத்தை!

எத்தனை நாளைக்குத்தான் இந்தக் காங்கிரஸ் ஆளவந்தார்கள், அலங்காரமான பேச்சுக்களிலும், உபதேசங்களிலும் காலத்தைச் செலவிட்டுக் கொண்டு, இந்தப் பிரச்சினையை வளரவிடுகிறூர்கள் என்றுதான் பார்ப்போமே!

உற்பத்திப் பெருக்கத் திட்டங்கள் உதவாக்கரையாயின?

உணவுத் தானியப் பற்றுக்குறை மேலும் நீடிக்கிறது

காங்கிரஸ் பேரவையின் 'அபாய எச்சரிக்கை' தீர்மானங்கள்

புதுடில்லி, நவ. 18—

இரண்டாயிரம் கோடி ரூபாய் செலவில், நாட்டின் உணவு உற்பத்தியைப் பெருக்கும் முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிந்த பின்னரும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் துவங்கி திங்கள்கள் 18 கழிந்தபின்னரும், வெளிநாடுகளிலிருந்து உணவுத்தானியத்தை இறக்குமதி செய்யக்கூடிய நிலையிலுள்ளது டெல்லிப் பேரரசு! நாட்டு மக்களின் அடிப்படையானதும், இன்றியமையாததுமான உணவுப் பிரச்சினையில் இன்னும் சாதக சூழ்நிலை காணப்படவில்லை!

காங்கிரஸ் பேரவையின் கூட்டத்திலும் உணவுப் பற்றுக்குறை ஏற்பட்டிருப்பது ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்டது; அந்தப் பற்றுக்குறையைச் சமாளிக்க ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

'10 சதவிகிதம் மட்டுமே உணவுத் தேவையில் பற்றுக்குறை ஏற்படும்' என்று அவர்கள் மதிப்பிட்டுள்ளனராம்.

அன்னியச் செலாவணியில் ஏற்கனவே உள்ள பற்றுக்குறை நிலையில், 'இறக்குமதி மூலம் உணவு நெருக்கடியைச் சமாளிக்கலாம்' என்று ஒப்புக்கு ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கோதுமை உபயோகிக்கும் பகுதிகளில் அரிசி உபயோகத்தைக் குறைக்கவேண்டும் என்று நிறைவேற்றப்பட்டிருக்கும் ஓர் தீர்மானம், வடவர் தென்னவருக்குப் பழக்கமான அரிசியை அதிகம் உபயோகிக்கின்றனர் என்பதையே காட்டுகிறது.

மாற்று உணவுகள் உபயோகிக்கப் பழகிக்கொள்ள வேண்டும் என்று மற்றொரு தீர்மானத்தையும் காங்கிரஸ் பேரவை நிறைவேற்றியிருப்பது, அரிசி சாப்பிடுப் பழக்கப்பட்டவர்களுக்கு எதிர்காலத்தில் ஏற்படவிருக்கும் திண்டாட்ட நிலைகுறித்து முன்னறிவிப்பாக எடுத்துக்காட்டுகிறது.

மீண்டும் உணவின் அவசியத்தையும் வற்புறுத்தி மற்றொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

"நாட்டின் உணவு நிலைமை கவலையைக் கொடுப்பதாகவே உள்ளது. மக்களின் கூட்டு முயற்சி மூலமாகவே நிலைமையைச் சமாளிக்கமுடியும்" என்று அத்தீர்மானத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறு கைத்தொழில் முன்னேற்றத்திற்காக இந்திய அரசாங்கம் ரூ. 1,50,00000 ஒதுக்கியுள்ளதில், சென்னை மாநிலத்திற்கு ரூ. 3·17 இலட்சம் மட்டுமே தரப்படும்; இதற்கு 3-சத விகிதம் வட்டியாம்!

சென்னை, கோவை நகரங்களிலுள்ள சிறு கைத்தொழில்களுக்கு மட்டுமே இக்கடன் தரப்படுகிறதாம்.

போலீசாருக்குத் தரும் 'படி'ச் செலவு

உயர்த்தித் தருமாறு கழக உறுப்பினர்கள் வற்புறுத்தல்

சென்னை, நவ. 15—

"நாள் ஒன்றுக்கு 12 அணு 'படி' யாக போலீசாருக்கு எந்த ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது? எத்தனை ஆண்டுகளாக இது மாற்றப்படவில்லை?"

என்று, தோழர் எம். பி. சுப்பிரமணியம் சட்டமன்றத்தில் கேட்டார்.

இந்தக் கேள்விக்கு தன்னிடம் தகவல் இல்லை என்று அமைச்சர் பதிலளித்தார்.

"சிறையில் உள்ளவர்களுக்குக் கூட 15 அணு தரப்படுகிறதே; போலீசாருக்கு இதை உயர்த்தக்கூடாதா?"

என்று தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி கேட்டார்.

"அது வேறு, இது வேறு" என்று அமைச்சர் கூறினர்.

புதியதோர் திட்டம்

உருவாக்கப்பட்டுள்ளதாம்

அலகாபாத், நவ. 18—

போதிய நிதிவசதி யில்லாத காரணத்தினுல் கல்வித் துறையில் முன்னேற்றத்தைக் காண முடியாத நிலையிலிருக்கும் கல்லூரிகளுக்கும், பல்கலைக் கழகங்களுக்கும் நிதி உதவியளிப்பது பற்றிய ஒரு திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது என்றும், அந்தத் திட்டம் அடுத்து கூட்டப்படும் பல்கலைக் கழக மானியக் குழுக் கூட்டத்தில் ஆராயப்படும் என்றும் அலகாபாத் மாணவர்களிடையே பேசுகையில், சிந்தாமணி தேஷ்முக் கூறியுள்ளார்.

இராணுவச் செலவு ரூ. 18,050 கோடி.

வாஷிங்டன், நவ. 18—

அமெரிக்காவின் இராணுவச் செலவு இப்போது ரூ. 18 050 கோடி என்று தெரியவருகிறது.

அடுத்த ஆண்டு மேலும் ரூ. 475 கோடி கூடுதலாகத் தேவைப்படும் என்று தெரியவருகிறது.

ஆந்திர மாநிலத்துக்கு அனுமதி மறுப்பு

சிமெண்டுத் தொழிற்சாலை நிறுவ டெல்லி இணங்கவில்லை?

ஐதராபாத், நவ. 18—

நாகார்ச்சுனு அணைக்கட்டுத் திட்டத்துக்குத் தேவையான சிமெண்டை உற்பத்தி செய்து வழங்கும் பொருட்டு, மாச்சேர்லாவில் ஓர் சிமெண்டு உற்பத்தித் தொழிற்சாலையை சொந்தத்தில் நிறுவிக்கொள்ள ஆந்திர மாநிலம் தெரிவித்திருந்த விருப்பத்துக்கு மத்தியப் பேரரசு இணங்கவில்லையாம்!

ஆந்திர சட்டசபை கேள்வி நேரத்தின்போது முதலமைச்சர் என். சஞ்சீவ ரெட்டி இத்தகவலைத் தந்தார்.

நாட்டின்கொடிபற்றிய கட்டுப்பாடு!

பத்தாண்டுகளுக்கு பிறகு சீர்திருத்த முயற்சி

புதுடில்லி, நவ. 18—

ஒரு நாட்டின் சின்னம் அந்த நாட்டின் கொடியேயாகும். அந்தக் கொடியை ஒழுங்கற்ற முறையில் பறக்க விடுவதைத் தடுத்து, மதிப்பு ஏற்படுத்தும் முயற்சியில் 10 ஆண்டுகளுக்குப் பிறகு முனைந்துள்ளனர்.

சுதந்தர தினக் கொண்டாட்டம், தேசிய வாரம் போன்ற காலங்களில் மட்டுமே பொது மக்கள், தங்கள் வீடுகளின் மீது கொடியைப் பறக்கவிடலாம். தனி நபர்களின் கார்களில் அந்தக் காலத்திலகூட கொடியைப் பறக்கவிடக் கூடாது என்று கூறப்பட்டுள்ளது.

அரசாங்கப் பணிமனைகள், கட்டிடங்கள் மீதுமட்டுமே நாட்டின் கொடியை பறக்கவிட வேண்டும் என்றும், குடியரசு துணைத் தலைவர், கவர்னர்கள், முன்னுள் மன்னர்கள், வெளிநாடுகளில் உள்ள இந்தியத் தூதுவர்கள் மட்டுமே கொடியை கார்களில் பறக்கவிடலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

தஞ்சைக்கு மருத்துவக் கல்லூரி?

சென்னை, நவ. 18—

"தஞ்சையில் மருத்துவக் கல்லூரி துவக்குவது பற்றி இன்னும் முடிவு செய்யவில்லை" என்று அமைச்சர் மாணிக்கவேலர் மேல்சபையில் தெரிவித்துள்ளார்.

இந்தக் கல்லூரி நிறுவ தஞ்சையில் ஒருவர் ரூ. 40 இலட்சம் ரூபாய் தருகிறேன் என்றும் கூறியிருப்பது தெரிந்ததே.

கலவரத்தில்

உயிரிழந்தவர்களுக்கு உதவி

அமைச்சர் தரும் தகவல்

சென்னை, நவ. 18—

இராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற கலவரத்தில் உயிரிழந்த குடும்பத்தினருக்கு நிவாரணம் அளிப்பதுபற்றி சென்னை அரசாங்கம் ஆராய்ந்துவருகிறது என்றும், மனுக்கள் கவனிக்கப்படும் என்றும், சாதிமத வேறுபாடுகள் ஏதும் நிவாரணம் அளிப்பதில் குறுக்கிடாது என்றும் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

புயல் நிதியிலிருந்து ரூ. 80,000 இராமகிருட்டிணு சங்கத்திடம் தரப்பட்டுள்ளதாம்.

முதுகுளத்தூர் தாலுகா முழுவதும் தேசீய விஸ்தரிப்புத் திட்டம் அமுலாக்கப்பட்டுள்ளதாம்.

சென்னை மாநிலத்திற்குக் கைத்தறி 'செஸ்' நிதி

ஒதுக்கப்பட்ட விவரம்

சென்னை, நவ. 16—

"1954—55-ம் ஆண்டில் ரூ 94·11 இலட்சம்; 1955—56-ம் ஆண்டில் ரூ. 116 48 இலட்சம்; 1956—57-ம் ஆண்டில் ரூ. 228 13 இலட்சம்—கைத்தறி 'செஸ்' நிதியாக சென்னை மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டது" என்று, தொழில் அமைச்சர் வெங்கட்ராமன் தெரிவித்தார்.

ரஷ்யாவில் தமிழ் அகராதி!

மாஸ்கோ, நவ. 18—

ரஷ்யாவில் முதல் முறையாக ரஷ்யா—இந்தி அகராதி ஒன்று வெளியிடப்பட்டுவிட்டதாம்.

இப்போது ரஷ்யா வங்காளம் அகராதி தயாராகிறதாம்.

அடுத்து ரஷ்யா—தமிழ், மற்றும் உருது, பஞ்சாபி மொழிகளில் அகராதிகள் தயாரிக்கப்படும் என்று தெரியவருகிறது.

கழகச் செய்திகள்

புதிய நிர்வாகிகள் தேர்வு

ஆங்காங்கு புதிதாக அமைக்கப்பட்டுள்ள தி. மு. கழகக் கிளைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிர்வாகிகள் விவரமும், பழைய கிளைகளுக்கான இடைத் தேர்தல்களில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள புதிய நிர்வாகிகளின் விவரமும் சுருக்கமாக இங்கு தரப்படுகிறது:—

சென்னை 24வதுவட்டம்:

22—10—57 காலை 10-மணியளவில் சென்னை மாவட்டத் துணைச் செயலாளர் கோ. செங்குட்டுவன் தலைமையில் 24-வது வட்ட தி. மு. க. கிளை நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது; அதுபோது செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளராக முறையே தோழர்கள் ந. சு. மணி, லோ. இளமாறன், ப. வெங்கடாசலம் ஆகியோரும், மாவட்டப் பிரதிநிதிகளாகத் தோழர்கள் ந. கிருட்டினன், தாமரைச்செல்வன் ஆகியோரும், 21 உறுப்பினர்கள் கொண்ட செயற்குழுவினரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சேலம்-ஆத்தூர்:

ஆத்தூர் தி. மு. க. கிளையின் உறுப்பினர் கூட்டம் 9-11-57-ல் நடைபெற்றபோது, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

செயலாளர்: டி. கே. மாதவன்; துணைச் செயலாளர்: கே. முத்து; பொருளாளர்: ஆர். கன்னையன்; மாவட்டப் பிரதிநிதி: பி. வி. கிருஷ்ணன்; புதிய செயற்குழு உறுப்பினர்: இரா. கிருட்டினன்; மற்ற செயற்குழு உறுப்பினர்கள் முன் உள்ளவர்களே.

இடையாற்றுமங்கலம்:

15—10—57 இரவு 8-மணியளவில், இடையாற்றுமங்கலத்தில் புதிதாக தி. மு. க. கிளை அமைக்கப்பட்டு, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

செயலாளர்: ஈ. எஸ். சந்தானம்; துணைச்செயலாளர்: இரா. கங்காதரன்; மாவட்டப்பிரதிநிதி: இ. பெ. அண்ணாமலை; பொருளாளர்: மோ. பிச்சை.

இராசிபாளையம்:

தி. மு. க. கிளையின் புதிய நிர்வாகிகள் தேர்வுக் கூட்டம் 29—9—57-ல் நடைபெற்றது; தோழர்கள் பே. தம்பி செயலாளராகவும், செங்குட்டுவன் துணைச் செயலாளராகவும், அ. நாராயணன் பொருளாளராகவும், செங்குட்டுவன் மாவட்டப் பிரதிநிதியாகவும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

குள்ளம்பட்டி:

20—10—57-ல் குள்ளம்பட்டி தி. மு. க. கிளையின் நிர்வாகிகள் தேர்தல் கூட்டம் சேலம் மாவட்டத் துணைச் செயலாளர் தோழர் ப. இராமலிங்கம் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் வெ. பழனியப்பன் செயலாளராகவும், ந. முனுசாமி துணைச் செயலாளராகவும், மு. இராமசாமி பொருளாளராகவும், ப. இராமலிங்கம் மாவட்டப் பிரதிநிதியாகவும், மு. கந்தன், கு. ஆறுமுகம், ம. சின்னப்பன், சி. மாரிமுத்து, மாரிமுத்து, செ. பழனியப்பன். சி. கந்தன் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கத்திரிப்புலம்:

இவ்வூர் பனையடிக்குத்தகைப் பகுதி தி. மு. க. நிர்வாகக் குழுத் தேர்தல், 7—10—57-ல், தோழர் சிவ. கனகசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. தோழர் பெ. சண்முகசுந்தரம் செயலாளராகவும், தோழர் பெ. முனியப்பன் துணைச் செயலாளராகவும், தோழர் வீ. கு. தருமலிங்கம பொருளாளராகவும், தோழர்கள் இரா. செந்தமிழ்ச்செல்வன், பெ. இராமசிங்கம் ஆகியோர் மாவட்டப் பிரதிநிதிகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கழகத் தோழர்களுக்கு முக்கிய அறிவிப்பு

தி. மு. கழகக் கிளைகளின் நிர்வாகிகள் தேர்தல் பற்றிய செய்திகள், மாவட்டச் செயலாளரின் கையொப்பத்துடன் அனுப்பப்பட்டால்தான் 'நம் நாடு' இதழில் வெளியிடப்படும் என்று பொதுச்செயலாளர் விடுத்திருக்கும் அறிக்கையை நினைவில் கொண்டு, கிளைக் கழகத் தோழர்கள் அந்தச் செய்திகளை மாவட்டக் கழகச் செயலாளர் கையொப்பத்துடன் அனுப்ப வேண்டுகிறோம்.

—ஆசிரியர்

பெங்களூர்-சலவாதிநகர்:

27—10—57 காலை 10மணிக்கு தி. மு. க. அமைப்புக் குழுக் கூட்டம், மாவட்டச் செயலாளர் எஸ். வி. பதி தலைமையில் நடைபெற்றபோது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: ஏ. தாமோதரம்; துணைச் செயலாளர்: ஸ்ரீதரன்; பொருளாளர்: மு. சினனசாமி; மாவட்டப் பிரதிநிதிகள்: மு. கிருட்டினன்; ஜே. ஏசுரத்தினம்.

தாராநல்லூர்:

14-10-57 இரவு 10 மணிக்கு தோழர் எஸ். நெடுமாறன் தலைமையில் நடந்த திருச்சி - தாராநல்லூர் (24-வது வட்டம்) தி. மு. க. புதிய நிர்வாகிகள் தேர்தலில் கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்: செயலாளர்; எம். கருப்பையன்; துணைச் செயலாளர்: எம். சுப்பிரமணியன்; பொருளாளர்: டி. வி. எஸ். பாலன்; நகரக் கழகப் பிரதிநிதிகள்: ஆர். மாணிக்கம், டி. ஆர். சீனிவாசன்; செயற்குழு உறுப்பினர்கள்: என். கோவிந்தன், டி, மூஸ்தபா, எஸ். எஸ். மணி, எம். கணேசன், என். மாணிக்கம், என். எஸ். மணி, டி. தியாகராசன், ஏ. அழகிரி.

குன்னூர்:

27—9—57-ல், தோழர் சு. தென்னன் தலைமையில், நகர தி. மு. கழகப் பணிமனையில் பொது உறுப்பினர்கள் கூட்டம் கூடி கீழ்க்கண்ட புதிய நிர்வாகக் குழுவைத் தேர்ந்தெடுத்தது:—செயலாளர்: ஜீ. மோ. பா. டைட்டஸ்; துணைச் செயலாளர். ஸ்டீவன்சன்; பொருளாளர்: கே. பி. முருகேஷ்; மாவட்டப் பிரதிநிதிகள்: ஜீ.மோ.பா. டைட்டஸ், எஸ். எம். சஞ்சீவிராசு; செயற்குழு உறுப்பினர்கள்: சு. பிறைமதி, டி. கே. செல்வன், எஸ். டி. சாமுவேல், டி. மகம்மது, பி. துரைராசு, எஸ். மாலன், ஓ. மாறன், என். அந்தோனிசாமி, ஓ. ஜே. மாது.

உடங்குடி:

17—9—57 இரவு 10 மணிக்கு தஞ்சை மாவட்டச் செயலாளர் என். எஸ். இளங்கோ அவர்கள் முன்னிலையில், நெல்லை மாவட்டச் செயலாளர் டி. ஆர். சுப்பிரமணியம் தலைமையில் உடங்குடி கிளை அமைப்புக் கூட்டம் நடைபெற்றபோது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: ஆ. செல்லத்துரை; துணைச் செயலாளர்: வி. பொ. சித்திரவேல்; பொருளாளர்: ப. தங்கய்யா; மாவட்டப் பிரதிநிதி: எம். எஸ். பால்ராசன்; 9 பேர் செயற் குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சாயர்புரம்:

14—7—57 மாலை 4½ மணிக்கு நெல்லை மாவட்டம் சாயர்புரம் தி. மு. கழகக் கிளையின் அமைப்புக் கூட்டம் தோழர் எஸ். வி. டி. துரை தலைமையில் நடைபெற்றது; செயலாளர்: ஆ. சண்முகம்; துணைச் செயலாளர்: ஞா. இராசபாண்டியன்; பொருளாளர்: பி. எஸ். பொன்; மாவட்டப் பிரதிநிதி: எஸ். வி. டி. துரை; செயற்குழு உறுப்பினர்கள்: தே. விக்டர், ஆ. முத்தையா, சு. பாலு, எம். செல்லத்துரை, வி. என். திருப்பதி, எல். மாசானமுத்து, சு. தனசிங்.

சிவந்தியாபுரம்:

13—10—57 இரவு 7 மணியளவில் மாவட்ட துணைச் செயலாளர் தோழர் டபிள்யூ. டி. துரைசாமி தலைமையில் நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது; செயலாளர்: சு. அருணாசலம்; துணைச் செயலாளர்: த. மாசிலாமணி; பொருளாளர்: ம. அருணாசலம்; மாவட்டப் பிரதிநிதி: ஆ.பூ. இளங்கோவன்; செயற்குழு உறுப்பினர்களாக 11 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

காரத்தொழுவு:

1—8—57-ல், தோழர் கே. வ. கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெற்ற தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டத்தில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: கே.என். சரபோஜி; துணைச் செயலாளர்: வி. டி. முத்துசாமி; மாவட்டப் பிரதிநிதி: சாமி. நரசிம்மன்; பொருளாளர்: ஆர். ராசு; விளம்பர உறுப்பினர்: கே. என். பாஷா; செயற்குழு உறுப்பினர்கள்: ஏ. கிருஷ்ணசாமி; அப்துல்சலாம், கே. பி. பொன்னுசாமி, ஆர். கே. ஆசைத்தம்பி, கே. பி. அய்யாசாமி, சாமி. தர்மராசன், பெரியசாமி, டி. சந்தானம்.

சாத்தூர்:

நகர தி. மு. க. உறுப்பினர்கள் கூட்டம் தோழர்கள் கே. ஆர். பி. மணிமொழியன் முன்னிலையிலும், பா. நடராசன் தலைமையிலும் 59-9-57-ல் நடைபெற்றபோது தோழர்கள் இரா. இராமச்சந்திரன் செயலாளராகவும், அ. பிச்சை துணைச்செயலாளராகவும், சி. இராஜதுரை பொருளாளராகவும், இரா. சந்திரதாசன், எம். நடராசன் ஆகியோர் மாவட்டப் பிரதிநிதிகளாகவும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பெங்களூர் மாவட்ட தி. மு. கழகம்

புதிய துணைச் செயலாளர், பொருளாளர் தேர்வு

27-10-57 மாலை 5 மணிக்கு பெங்களூர் மாவட்ட தி. மு. க. பிரதிநிதிகள் கூட்டம் அக்கிப்பேட்டை தி. மு. கழக மனையில் நடைபெற்றபோது, துணைச் செயலாளர் மா. மன்னர், பொருளாளர் விஜயரங்கம் ஆகியோர் அவர்களது பொறுப்புகளிலிருந்து விலகிக்கொண்டதன் காரணமாக ஏற்பட்ட இடங்களைப் பூர்த்தி செய்ய நடைபெற்ற தேர்தலில் தோழர் வி. முத்து (இராமச்சந்திரபுரம்) துணைச் செயலாளராகவும், தோழர் இராசவன் (பெரியார்நகர்) பொருளாளராகவும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

★

மாவட்ட மன்றங்களுக்கு ஓர் வேண்டுகோள்

"பெங்களூர் மாவட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்துடன் தொடர்புள்ள மன்றங்கள், படிப்பகங்கள், நாடக மன்றங்கள் மாவட்டத்தில் வைத்திருக்கும் பதிவுப் புத்தகத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கோருகிறேன்," என்று, மாவட்டச் செயலாளர் எஸ். வி. பதி அவர்கள் அறிவிக்கிறார்.

பன்மொழிப்புலவர் நிதிக்கு சிறப்புக் கூட்டம்

கண்ணதாசன் தலைமையில் அண்ணா, நெடுஞ்செழியன் பேருரை

சென்னை, நவ. 18—

நேற்று காலை 10-30 மணியளவில், சென்னை-மயிலை இராசேசுவரி பாடசாலையில், பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் அவர்களின் பொன்விழாவுக்கென ஓர் சிறப்புக் கூட்டம் தோழர் கண்ணதாசன் அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது.

இவ்விழாவினை சென்னை 45-வது வட்ட தி. மு. கழகக் கிளையினர் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

பாடசாலை நிரம்பிவழியும் அளவுக்கு ஏராளமான கழகத் தோழர்களும்—ஆதரவாளர்களும் - பொது மக்களும் கட்டணம் செலுத்தி வந்து குழுமியிருந்தனர்.

சிறப்புக் கூட்டத்தில் அண்ணா அவர்களும், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

கூட்டத் துவக்கத்தில் தோழர்கள் எம். என். வேலுசாமி குழுவினர், சேலம்-சீனிவாசன், உளுந்தூர்ப்பேட்டை கே. டி. நித்தியானந்தம் ஆகியோர் இன்னிசை வழங்கினர்.

தலைவர் தனது தலைமையுரையில், தி. மு. கழகம் நாட்டில் அடைந்திருக்கும் வளர்ச்சியின் சிறப்பையும், கழகம் ஆற்றிவரும் தொண்டினையும், காங்கிரஸ் பெற்ற வெற்றி எத்தகையது என்பது குறித்தும், காங்கிரசு ஆட்சியினர், கல்வியறிவை மக்களுக்கு ஊட்டும் பிரச்சினையில் காட்டும் அக்கறையற்ற தன்மையையும், இந்தியா 'சுதந்தரம்' பெற்ற பிறகு சுதந்தரம்பெற்ற சீனா போன்ற நாடுகள் பெற்றுள்ள வளர்ச்சியையும்பற்றி எடுத்துரைத்தார்.

அடுத்துப் பேசிய தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், கா. அப்பாத்துரையாருக்கு நாம் நிதியளிக்க வேண்டியதன் அவசியத்தையும், தமிழகப் புலவர்கள் நிலையையும், நாட்டின் வரலாற்றையும், மொழியின் வளர்ச்சியையும், நாடு பெறவேண்டிய எழுச்சியையும் இலக்கிய எடுத்துக்காட்டுக்களோடு மிகச் சிறப்பான முறையில் எடுத்துரைத்தார்.

பின்னர் அண்ணா அவர்களிடம் 45-வது வட்ட தி. மு. க. கிளைச் செயலாளர் தோழர் தம்பித்துரை அவர்கள் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் பொன்விழா நிதிக்கென ரூ. 501 கொண்ட பணமுடிப்பை அளித்தார்.

நிதியைப் பெற்றுக்கொண்ட அண்ணா அவர்கள், நிதி கொடுத்த தோழர்களுக்கு நன்றி கூறிவிட்டு, பண்டைக்காலத்தில் சிறப்போடு வாழ்ந்த தமிழன் இடைக்காலத்தில் தாழ்ந்துவிட்டதற்குக் காரணம், தமிழ்நாட்டின் வரலாறு, ஆரம்பத்திலிருந்தே

(4-ம் பக்கம் பார்க்க)

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

★

திருத்தணி:

28—10—57 மாலை 6 மணிக்கு தோழர் என். ஏ. ரகீம் தலைமையில் பொதுக்கூட்டம் தொடங்கியது; தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர் சிற்றரசு பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"எல்லைப் போராட்டம் என்ற ஒன்றை நடத்தி இந்தத் திருத்தணியைப் பெற்றோம்என்று சிலர் மகிழ்ச்சிகொள்கிறார்கள்; ஆனால் எந்தவிதப் போராட்டமும் நடத்தாமலே பொன்னேரி தாலுகாவிலும், திருவள்ளூர் வட்டத்திலும் செழுமையான நஞ்சை நிலங்களடங்கிய பகுதியும், ஆரணியாறு உள்ளடங்கிய 310 மைல் சுற்றளவை ஆந்திர சர்க்கார் பெற்றுவிட்டது என்றெண்ணும் போது, 'நாம் பெற்றது வெற்றிதானா?' என்பதை நாம் சிந்திக்க வேண்டியிருக்கிறது."

திருவெறும்பூர்:

சந்தைத் திடலில் 2-11-57இரவு 7-மணிக்கு, தோழர்காமாட்சி தலைமையில் கூட்டம் தொடங்கியது. தலைவர், கடந்த தேர்தலில் தனக்கேற்பட்ட தோல்வியின் காரணங்களை விளக்கியபின், தோழர்கள் மதிவாணன், எஸ். நெடுமாறன், அன்பில்-தர்மலிங்கம் ஆகியோர் பேசினர்.

இறுதியாகப் பேசிய தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள், இந்தி நுழைவைக் கடுமையாக எதிர்த்து ஒழிப்பதற்குத் தயாராக இருக்க வேண்டுமென்பதையும், மத்திய சர்க்கார் இடும் கட்டளைகள் எவையாயினும் முன்பின் யோசிக்காமல் உடனே நிறைவேற்றித் தரும் அடிமை மனப்பான்மையிலே இருக்கும் நமது மாநில சர்க்காரின் கண்மூடிப் போக்கினைக் கண்டித்தும் விரிவுரையாற்றினர்.

இடமணல்:

5—11—57 இரவு 7 மணிக்கு, ஊர்ச்சாவடிக்கெதிரில் தோழர் வடிவேலு தலைமையில் பொதுக் கூட்டம் தொடங்கியது.

தோழர்கள் எஸ். சோமசுந்தரம், டி. சே. கோபாலகிருட்டினன், சி. ஜம்பு ஆகியோர் பேசிய பின், தோழர் சிற்றரசு அவர்கள், கழகத் தோழர்கள் நடந்து கொள்ள வேண்டிய முறைகளைப் பற்றியும், கழகம் இன்று மக்களிடையே பெற்றுள்ள உயர்வைப் பற்றியும் எதிரிகள் எவ்வளவு தான் குற்றம் சுமத்தினாலும், அவைகளை அலட்சியப்படுத்தி விட்டு கழகத்தை ஆதரிக்க 17 இலட்சம் மக்கள் தயாராகி விட்டார்கள் என்பதையும் விளக்கிப் பேசினர்.

வல்லம் (தஞ்சை):

சிவன்கோயில் முன்பாக அமைக்கப்பட்டிருந்த அழகான பந்தலில் 6-11-57 இரவு 7-மணிக்கு தோழர் இரங்கசாமி தலைமையில் கூட்டம் தொடங்கியது. தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர் சிற்றரசு பேசும்போது, 1947-ல், தான் இங்கே வந்திருந்தபோது மாற்றுக் கட்சியின் கோட்டையாக இருந்த இந்த வல்லம், இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெல்லமாக மாறியிருப்பதையும், இங்குள்ள முஸ்லிம் நண்பர்கள் என்றும்போல் இன்றும் ஆதரவு தருவதையும் குறிப்பிட்டுவிட்டு, இந்தி எதிர்ப்பு, திராவிட நாடு பிரிவினை, கழக வளர்ச்சி, கடந்த பொதுத் தேர்தல் எதிரிகளுக்குக் கொடுத்த பாடம் ஆகியவைகளைப் பற்றி நீண்டநேரம் பேசினர்.

கோட்டப்பாளையம்:

புதிய கழகக் கிளைத் துவக்கவிழா

7—11—57 மாலை 6 மணிக்கு, கொப்பம்பட்டி தோழர் கை. ஆறுமுகம் அவர்களால் கொடியேற்றி வைக்கப்பட்டபின், பொதுக்கூட்டம் தொடங்கியது. தலைவர் முன்னுரைக்குப்பின், தோழர் எஸ். நெடுமாறன் பேசினர்.

அடுத்து தோழர் சிற்றரசு அவர்கள் அரியதோர் கொள்கை விளக்கம் தந்தார்.

பெருத்த மழையின் காரணமாக தெருவும், கூட்டம் நடந்த இடமும் வெள்ளக்காடாக இருந்தும் மழையையும் வெள்ளத்தையும் பொருட்படுத்தாமல் திரளான மக்கள் நின்றபடியே பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

தமிழ்நாட்டுத் திட்டங்கள் உருவாகும் நிலை?

சட்டமன்றத்தில் அமைச்சர் தரும் தகவல்

சென்னை, நவ. 16—

இந்தியப் பேரரசின் இரண்டாவது பேராசைத் திட்டத்தின் அடிப்படை இலச்சுகள் மட்டுமே நிறைவேற்றப்படுமாம்.

எஃகு, நிலக்கரி, இரயில்வே மின்சாரம் முதலியன திட்டத்தின் அடிப்படையாம்.

அந்நியச் செலாவணியில், இந்தியப் பேரரசு, பற்றாக்குறை நிலையில் இருப்பதால். சென்னை மாநிலத்தின் 1958—59-ம் திட்டங்கள், அந்நியச் செலாவணி அவசியமில்லாதவகையில் உருவாக்கப்படுகிறதாம்.

சட்டமன்றத்தில், கேள்வி நேரத்தின்போது நிதி அமைச்சர் சுப்பிரமணியம் இதனைத் தெரிவித்தார்.

101 குடும்பங்களுக்கு விடுகட்டித் தர திட்டமாம்!

இந்திய சர்க்கார் தரும் உதவிபற்றி அமைச்சர் தகவல்

சென்னை, நவ. 16—

சென்னை துறைமுகப் பகுதியில் நடைபாதையில் வாழும் 101 குடும்பங்களுக்கு வீடு கட்டித் தரத் திட்டமிடப்பட்டுள்ளதாம்!

தொடர்ந்து 1,300 குடும்பங்களுக்கும் இந்தத் திட்டம் விரிவாக்கப்படுமாம்.

மத்திய அரசு, இதற்காக ரூ. 75,750 ஒதுக்கியுள்ளதாம்.

சட்டமன்றத்தில் தொழில் அமைச்சர் வெங்கட்ராமன் தெரிவித்தார்.

பன்மொழிப் புலவர் நிதிக்கு......

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தொகுக்கப்படாமலிருந்தது தான் என்றும், அப்பணியை தற்போது அப்பாத்துரையார் ஆற்றிவருகிறார் என்பதையும், அவருக்கு நிதியளிக்கவேண்டியதன் அவசியத்தையும், காங்கிரஸ் பெற்றுள்ள வெற்றிகுறித்தும் சிறப்பான ஓர் கருத்துரையாற்றினார்.

இறுதியில் தலைவர் முடிவுரைக்குப்பின் சிறப்புக் கூட்டம் இனிது முடிவுற்றது. (ந. நி.)

இராமநாதபுரம் சம்பவங்கள்:

மக்கள் சபையில் எதிர்க் கட்சியினர் வெளிநடப்பு!

பலியானோர் தொகை மறைக்கப்படுவதாக தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத் தலைவர் புகார்

புதுடில்லி, நவ. 18—

இராமநாதபுரம் சம்பவங்கள்பற்றி விவாதிக்க, சபையை ஒத்தி வைக்க வேண்டுமென மக்கள்சபையில் கொண்டுவரப்பட்ட பிரேரணையை சபைத் தலைவர் அனந்தசயனம் அய்யங்கார் நிராகரித்தார்.

சபைக் கூட்டம் தொடங்கிய அன்று கொண்டுவரப்பட்ட பிரேரணைமீது தீர்ப்புக் கூறுவதை அவர் ஒத்திவைத்திருந்தது தெரிந்ததே.

'சம்பவங்கள், சென்னை மாநிலத்தின் சட்டம், ஒழுங்கு பற்றியவை என்பதால், அதுபற்றி மக்கள்சபை விவாதிக்கக்கூடாது' என, சென்னை சர்க்கார் ஆட்சேபம் கிளப்பியிருந்தார்கள். அதன் அடிப்படையில், 'இந்த விவகாரம், சென்னை சர்க்காருடைய முழுப் பொறுப்பானது என்பதால் இந்தப் பிரேரணையை அனுமதிக்க முடியாது' என, சபைத் தலைவர் தீர்ப்புக் கூறியிருக்கிறார்.

என்றாலும், 'பிரேரணையின் உள்ளடக்கமான விஷயத்தை, தாழ்த்தப்பட்டோருக்கு நிவாரணம் அளிப்பதைப் பொறுத்து, தாழ்த்தப்பட்டோர் கமிஷனரின் அறிக்கைமீது விவாதம் நடக்கும் போது பேசிக்கொள்ளலாம்' என்றும் சபைத் தலைவர் கூறியுள்ளார்.

வெளிநடப்பு

கேள்விநேரத்தின் போது, இராமநாதபுரம் சம்பவங்கள்பற்றி மேலும் பல தகவல்கள் அறியும் நோக்குடன் தாழ்த்தப்பட்டோர் பெடரேஷனைச் சேர்ந்த உறுப்பினர்கள்—குறிப்பாக பி. சி. காம்ப்ளே அடிக்கடி எழுந்து கேள்வி கேட்டுக்கொண்டிருந்தனர்.

சபைத் தலைவர் பலமுறையும், காம்ப்ளேயை இடத்தில் அமருமாறு கேட்டார்.

கலகத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கைபற்றி தகவல் தர உள்நாட்டு மந்திரி மறுத்துவிடவே, சம்மேளனத்தைச் சேர்ந்த ஐந்து உறுப்பினர்களும் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்திருக்கின்றனர்.

நெல்லிக்குப்பம் தொகுதி தேர்தல் வழக்கு

21-ந் தேதியன்று விவாதம்

சென்னை, நவ. 19—

நெல்லிக்குப்பம் தொகுதியில் வெற்றிபெற்ற முன்னாள் மந்திரி இராமசாமி படையாச்சியின் தேர்தல் செல்லாதென நமது கழக அபேட்சகர் தோழர் கிருஷ்ணமூர்த்தி வழக்குத் தொடுத்திருப்பது தெரிந்ததே.

இந்த வழக்கினைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென இராமசாமி படையாச்சி அவர்கள் எழுப்பியுள்ள ஆட்சேபம் பற்றி திருச்சி தேர்தல் வழக்கு மன்றத்தில், 21-ந் தேதியன்று விவாதம் நடைபெறும்.

நமது அபேட்சகர் தோழர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள், தனக்காகத் தானே வாதாடுவார்.

திருச்சி மாவட்ட தி.மு.கழகச் செயலாளர் தோழர் அன்பில்-தர்மலிங்கம், திருச்சி நகர தி.மு.க. செயலாளர் தோழர் எம். எஸ். மணி ஆகியோர், தோழர் கிருஷ்ணமூர்த்தியுடன் இருந்து வழக்கு விசாரணையைக் கவனித்து வருகின்றனர்.

2,250 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன!

சென்னை, நவ. 19—

சென்னை நகரத்தில் பெய்த மழையின் காரணமாகப் பல்வேறு பகுதிகளில் மொத்தம் 2,250 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன என்றும், இவர்களுக்காக ரூ. 40,000 ரொக்க மானியமாக அளிக்கலாம் என்றும் சென்னை கலெக்டர், மாநில அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளார் என்று தெரியவருகிறது.

பொன்னம்பலனார் வருகை

மலாயா, சிங்கப்பூர் நாடுகளில் கடந்த ஆறுமாத காலமாகத் தங்கியிருந்து சிறப்பான தொண்டாற்றிவிட்டுத் தாயகம் திரும்பும் அ. பொன்னம்பலனார் அவர்கள், 'எஸ். எஸ். ஸ்டேட் ஆப் மதராஸ்' கப்பல் மூலம் சென்னைத் துறைமுகத்திற்கு 20—11—57 புதனன்று காலை 7½ மணியளவில் வந்து சேருவார்கள்.

சென்னையில் உள்ள கழகத் தோழர்களும், சார்பு மன்றங்கள் படிப்பகங்களைச் சேர்ந்த தோழர்களும் அன்று காலை துறைமுகம் சென்று, திரு. பொன்னம்பலனார் அவர்களுக்குச் சிறப்பான வரவேற்பளிக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

'அறிவகம்' சென்னை 18-11-57 } தலைமை நிலையம், (தி. மு. க.)

தஞ்சையில் சிறப்புக் கூட்டம்

இரா. நெடுஞ்செழியன் கலந்து கொள்கிறார்

24—11—57 காலை 9மணிக்கு தஞ்சை இராமநாதன் செட்டியார் மண்டபத்தில், நகர தி. மு. கழக நிதிக்காகவும், சேலம் தேர்தல் வழக்கு நிதிக்காகவும் ஓர் சிறப்புக் கூட்டம் நடைபெறும்; தோழர் எஸ். பெத்தண்ணன் தலைமையில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் 'இலக்கிய இன்பம்' என்ற பொருள் குறித்துச் சொற்பொழிவாற்றுவார்.

நன்கொடை : ரூ. 1; அணா 8.

கழகக் கூட்டம்

வட்டத்தூர்

(சிதம்பரம் வட்டம்)

21—11—57 மாலை 5 மணிக்கு

பேசுவோர் :

இரா. நெடுஞ்செழியன்

பொன். சொக்கலிங்கம்

என். எஸ். கே. நினைவு மன்றத் துவக்கவிழா

19—11—57 மாலை 6 மணிக்கு சென்னை முத்தியாலுப்பேட்டை சாலை விநாயகர் கோவில் தெரு, 64 எண்ணுள்ள மனையில் என். எஸ். கே. நினைவு மன்றத் துவக்க விழா தோழர் சனாரயகம் தலைமையில் நடைபெறும். என். எஸ். கே. படத்தையும், படிப்பகத்தையும் முறையே தோழர்கள் கோதண்டராமன், என். இராமதாஸ் ஆகியோர் திறந்துவைப்பார்; தோழர்கள் தமிழ்ச்செல்வன், கா. மு. சீனிவாசன், தெ. அன்பரசு ஆகியோர் பேசுவர்.

சேலம் நகர தி. மு. க. செயற்குழு உறுப்பினர்களுக்கு

20—11—57 இரவு 9 மணிக்கு சேலம் நகர தி. மு. கழகக் கிளையின் செயற்குழுக் கூட்டம் கழக மனையில் நடைபெறும். அப்போது பல முக்கிய பிரச்சினைகள் ஆய்வுக்கு வர இருக்கின்றன.

ஆதியராகநத்தம் விவசாய முன்னேற்ற சங்க பொதுக்கூட்டம்

21—11—57 இரவு 7 மணிக்கு ஆதிவராகநத்தம் (புவனகிரி) கே. வி. கே. சாமி திடலில் விவசாய முன்னேற்றச் சங்கத்தின் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் க. தங்கராசு தலைமை வகிப்பார். தி.மு.க பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழர்கள் இரெ. பாலகுருசாமி, கூ. ஆறுமுகம், வி. வி. சாமிநாதன், ஏ. ஈ. இராமகிருட்டினன் ஆகியோர் பேசுவர்.

திருக்குறள் வகுப்பு

20—11—57 மாலை 6-30 மணி அளவுக்கு, சென்னை—பெத்து நாயக்கன்பேட்டை முருகேச முதலித் தெரு, 2-ம் எண்ணுள்ள கட்டடத்தில் 'திருக்குறள் வகுப்பு', புலவர் கா. சி. தனக்கோட்டி அவர்களால் நடத்தப் பெறும்.

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

நவம்பர்

20 : மாலை - நெல்லிக்குப்பம்
இரவு - கடலூர்
21 : மாலை - வட்டத்தூர்
இரவு - புவனகிரி
22 : மாலை - அம்மையப்பன்
23 : காலை - முத்துப்பேட்டை
மாலை - பாப்பாநாடு, ஏனாதி
இரவு - பட்டுக்கோட்டை
24 : காலை - தஞ்சாவூர்
மாலை - திருச்சேறை
இரவு - குடந்தை
25 : மாலை - செந்தாரைப் பட்டி
இரவு - ஆத்தூர்

என். வி. நடராசன்

சுற்றுப்பயணம்

நவ. 22 : காலை—தூத்துக்குடி (கே. வி. கே. சாமி தமையனார் மகன் திருமணம்)

கே. ஏ. மதியழகன்

சுற்றுப்பயணம்

நவம்பர்

24 : செங்குட்டபாளையம் (பொள்ளாச்சி)
25 : மாலை 4 மணி-பந்தநல்லூர் வரவேற்பு
மாலை 6 மணி-கிழக்காட்டூர் தி. மு. க. துவக்கவிழா
26 : காலை 8 மணி - திருவம்பநல்லூர்
காலை 10 மணி-சோழபுரம் வரவேற்பு
மாலை 4 மணி - அணைக்குடி கொடியேற்று விழா
மாலை 6 மணி - அம்மன் பேட்டை பொதுக்கூட்டம் (தஞ்சை மாவட்டம்)
27 : ஆண்டிமடம் (திருச்சி மாவட்டம்)

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் தோழர்கள் புலவர் ஆறுமுகம் ம. கோ. மணி, என். அசோகன், பீ. எ. லிங்கன் கலந்துகொள்வார்கள்.

நண்பர் நூலக செயற்குழு கூட்டம்

21—11—57 மாலை 6-30 மணி அளவில், சென்னை—கொண்டித்தோப்பு, கன்னையநாயுடு வீதி, 1/7 எண்ணுள்ள நண்பர் நூலகப் பணிமனையில் தோழர் எஸ். சேஷாசலம் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

புதுவைத் தி. மு. கழக இடமாற்றம்

இம்மாதம் 15-ந்தேதியிலிருந்து கீழ்க்கண்ட முகவரியில், கழக இடம் மாற்றப்பட்டிருக்கிறது :—

புதுவைத் தி. மு. கழகம்,
95, துய்ப்ளேக்ஸ் தெரு,
புதுச்சேரி

தரப்படும் அரிசி ஒரு படியாக குறையும்

கோதுமை மட்டும் தாராளமாகக் கிடைக்குமாம்!

சென்னை, நவ. 18—

நியாய விலைக் கடைகளில், இப்போது நபர் ஒன்றுக்குத் தரப்படும் இரண்டு படி அரிசியை, இனி ஒரு படி அரிசியாகக் குறைத்துவிட சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்களாம்!

ஆனால், அதேபோது, நபர் ஒன்றுக்கு கோதுமை ஐந்து படி தரப்படுமாம்!

இந்தக் கோதுமையை எவரும் வாங்கித்தானாக வேண்டும் என்று கட்டாயம் இல்லையாம்; ஆனால், நியாய விலைக் கடைக்காரர்கள் மட்டும் கட்டாயம் கோதுமையை வாங்கி வைத்திருக்கவேண்டுமாம்!

நியாய விலைக் கடைகளில், ஒருவருக்குத் தரப்படும் அரிசி ஒரு படியாகக் குறைக்கப்படுவதை ஒட்டி, இப்போதுள்ள கடைகளின் எண்ணிக்கை இரு மடங்காக உயர்த்தப்படுமாம்!

இப்போது சென்னையில் 124 கடைகள் இருக்கின்றன என்றும், இவை 248 கடைகளாக்கப்படும் என்றும் சர்க்கார் தெரிவித்திருக்கிறது.

மாநிலம் முழுவதிலுமாக இப்போது 450 கடைகள் இருப்பதாகவும், இவை இனி 900 வரை அதிகரிக்கப்படும் என்றும் சர்க்கார் கூறுகிறது.

டெல்லி சர்க்கார், இந்த மாநில நியாய விலைக்கடைகள் மூலம் விற்பதற்காக பெரிய மனது வைத்து 4,000 டன் அரிசி மாதந்தோறும் தர சம்மதித்திருக்கிறார்களாம்!

இந்தி திணிப்பின் நோக்கம்

(1-ம பக்கத் தொடர்ச்சி)

பத்திரும்ப—ஒருவர் மாற்றி ஒருவர் கூறிவருகின்றனர்.

இந்தி எதற்காகத் திணிக்கப்படுகிறது என்பது பட்டவர்த்தனமாக்கப்பட்டுவிட்டது.

'இந்தியாவின் ஒற்றுமை' என்பது வடநாட்டிற்கு தென்னாட்டை நிரந்தர அடிமையாக்கும் சூது நிறைந்த ஏற்பாடு என்பதில் சந்தேகமா?

குழுவின் கூட்டம் பகிரங்கமாக நடைபெற...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தர்ப்பம் உண்டென்றாலும், அதில் ஒரு வார்த்தையைக் கூடத் திருத்துவதற்கு மக்கள் சபையால் முடியாது! குடியரசுத் தலைவரின் இறுதியான சம்மதத்தைப் பெறுவதற்கு, நேரடியாக அறிக்கை சென்றுவிடும்.

"இரகசியமாக குழுக் கூட்டம் நடத்தப்பட்டால் அது, உண்மைக்குப் புறம்பான ஒரு சூழ்நிலையிலேயே நடைபெறும். குழு என்ன சொல்கிறது—என்ன எண்ணுகிறது என்பதை நாடு தெரிந்து கொள்ள முடியாதுபோகும்.

"பிரபலமான இந்தி வெறியர்களும், இந்தி பேசும் பிரதேசத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளுமே இப்போது குழுவில் இடம் பெற்றிருக்கிறார்கள்.

"இந்த நிலையில், குழுவின் நடவடிக்கைகளை இரகசியத் திரையால் மூடிவிட்டால், இறுதியானவை என்ற தன்மையில் திடீரென சிபாரிசுகள்தான் நாட்டிற்குக் கிடைக்கும்."

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.